# யூபிலி 2025: எதிர்நோக்கின் திருப்பயணிகள்

## திருவருகைக் காலம் 2023: திருவழிபாட்டுக் கையேடு

### திருவருகைக் கால மலர்தொடுப்பு, மெழுகுத் திரிகளைப் புனிதப்படுத்த

வானகத் தந்தையே இறைவா, திருவருகைக் கால மலர்தொடுப்பைச் சூழ்ந்துள்ள நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். திருவருகைக் காலம் சுட்டி காட்டும் எதிர்பார்ப்பு, தயாரிப்பு என்னும் நிலைகளை இந்த மெழுகுத்திரிகள் உலகின் ஒளியான உம் திருமகன் இயேசுவை எங்களுக்கு நினைவுபடுத்துகின்றன. இந்த மெழுகுத்திரிகளைப் புனிதப்படுத்தியருளும். இவை எங்களுக்கு எதிர்நோக்கு, அமைதி, மகிழ்ச்சி, அன்பு என்னும் திருவருகைக் காலத்தின் இயல்பான தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. இத்தகைய சுடரொளிகள் எங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் மறைந்துள்ள இருளை நீக்கவும் கிறிஸ்துப் பிறப்புப் பெருவிழாவை உண்மையான மகிழ்வுடன் கொண்டாடவும் துணைபுரிவனவாக.

❶ இறைவா, இப்போது நாங்கள் எதிர்நோக்கை வெளிப்படுத்தும் இந்த முதல் மெழுகுத்திரியை ஏற்றுகிறோம். இது எங்கள் உள்ளங்களில் உமது வார்த்தைகளின் வல்லமையைப் புரிந்துகொள்ளவும், நம்பிக்கையுடன் உம்மை எதிர்பார்க்கவும் எங்களுக்கு தூண்டுதல் தருவதாக. இந்தச் சுடரொளி எங்கள் வாழ்விலும், உலகிலும் எதிர்நோக்கின் விளக்காக அமைவதாக.

❷ ஆண்டவரே அமைதியை வெளிப்படுத்தும் இரண்டாவது மெழுகுத்திரியை இப்போது நாங்கள் ஏற்றுகிறோம். இது நீர் வழங்கும் அமைதி, எங்கள் உள்ளங்களிலும், இல்லங்களிலும், உலகிலும் பரவி நிற்கத் துணைபுரிவதாக. இதனால் அமைதியின் அரசரான உம் திருமகன் இயேசுவின் அமைதியை நாங்கள் பெற்றுக்கொள்வோமாக.

❸ ஆண்டவரே மகிழ்சியை வெளிப்படுத்தும் இந்த மூன்றாம் மெழுகுத்திரியை இப்போது நாங்கள் ஏற்றுகிறோம் இவ்வேளையில் உமது விடுதலையின் மகிழ்ச்சி எங்கள் உள்ளங்களை நிரப்புவதாக. உம் திருமகன் இயேசுவின் பிறப்பின் நற்செய்தி அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியை வழங்கியதைப்போல நாங்களும் அதே மகிழ்ச்சியை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளத் துணைபுரியும்.

❹ ஆண்டவரே இறுதியாக நாங்கள் அன்பை மையப்படுத்தும் நான்காம் மெழுகுத்திரியை ஏற்றுகிறோம் இவ்வேளையில் நீர் அனைவரையும் அன்புசெய்யும் மனத்துடன் செயல்பட்டதைப்போல நாங்களும் அன்பில் வளர உதவிபுரியும். உம் திருமகன் இயேசுவின் பிறப்பு எங்களையும் நாங்கள் சந்திக்கின்ற நபர்களையும் அன்பால், அமைதியால், மகிழ்ச்சியால் நிரப்புவதாக.

இதற்காக நாங்கள் தயாரித்து வைத்துள்ள இந்த திருவருகைக் கால மலர் தொடுப்பைப் புனிதப்படுத்தியருளும். இது உம் திருமகன் இயேசுவின் வருகைக்காக எதிர்நோக்குடனும் தகுந்த தயாரிப்புடனும் ஈடுபடத் துணைபுரிவதாக. எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

பாடல்: மாரனாதா மாரனாதா எம் ஆண்டவரே வருக ..அல்லது

எந்தன் நெஞ்சுக்குள்யே நீ பிறக்க எனக்கென்ன கவலை என் இறைவா

# திருவருகைக் கால முதல் ஞாயிறு

# இறைவெளிப்பாட்டில் ஒளிரும் எதிர்நோக்கு

முன்னுரை

அன்புக்குரியவர்களே திருவருகைக் கால முதல் ஞாயிறிலிருந்து நாம் புதியதொரு திருவழிபாட்டு ஆண்டைத் தொடங்குகிறோம். "கடவுளின் வார்த்தை" என்ற மடலில் வலியுறுத்தப்படும் கிறிஸ்துவ எதிர்நோக்கு இறைவெளிப்பாட்டின் மூலம் கடவுளையும் அவரது மீட்புத் திட்டத்தையும் உணர்த்துகிறது. கடவுள் தம் அன்புத் திருமகன் இயேசு கிறிஸ்துவை நமக்கு இடைநிலையாளராகவும், இறைவெளிப்பாட்டின் முழுமையாகவும் வெளிப்படுத்துகிறார். இந்த திருவருகைக் காலத்தில் எதிர்நோக்கின் கருத்துகளை எண்ணிப்பார்க்கவும் நமது உள்ளங்களை இயேசுவின் வருகைக்காகத் தயாரிக்கவும் இந்தக் கொண்டாட்டங்களில் பங்கேற்க மகிழ்ச்சியின் எதிர்பார்ப்புகளுடன் கலந்துகொள்ளவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

இன்று ஒன்றிப்பு ஞாயிறு. இதன்மூலம் இந்திய நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக மன்றாடவும், நமது ஒற்றுமையை வெளிப்படுத்தவும் சிறந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. திருமுழுக்கின்மூலம் அனைவருக்கும் நற்செய்தி அறிவிக்கவும், இந்தியாவில் நற்செய்தி அறிவிக்கின்ற மறைப்பணித் தளங்களில் பணிபுரிகின்ற அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், பொதுநிலையினர் ஆகியோருக்கு நம்மால் இயன்ற அளவில் பொருள் உதவி, பண உதவி இவற்றைத் தராளாத மனத்துடன் வழங்கித் துணைபுரியவோம்.

## திருவருகைக் கால மலர்தொடுப்பிற்கான மன்றாட்டு

ஆண்டவரே, குழப்பமான சூழ்நிலைகளுக்கு இடையே வாழும் எங்களுக்கு நீரே உறுதியான எதிர்நோக்கு. இந்த திருவருகைக் கால நாள்களில் உமது வார்த்தைகளைக் கேட்கவும், சிந்திக்கவும், எவை முக்கியமானவையோ அவற்றில் மட்டும் ஆர்வம் காட்டவும் துணைபுரியும். உம் திருமகன் இயேசுவின் பிறப்பைப் கொண்டாட எங்கள் உள்ளங்களைத் தயாரிக்கின்ற இந்த நாள்களில் எங்களது முழு எதிர்நோக்கையும் உம்மில் வைக்கிறோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்

**1. திரு அவைக்காக மன்றாடுவோம்:** விவிலியத்தில் காணப்படும் எதிர்நோக்கின் செய்திகளை அறிவிக்கவும் அனைத்து நம்பிக்கையாளர்களும் உண்மையான கடவுளைக் கண்டுகொண்டு உறுதியான நம்பிக்கையில் வளரவும் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. உலகத் தலைவர்களுக்காக மன்றாடுவோம்:** நீதியிலும் ஞானத்திலும் மக்களை வழிநடத்தவும் அனைத்து மக்களின் நல்வாழ்வுக்காக அமைதி, ஒற்றுமை ஆகியவற்றை நிலைநாட்டவும் தேவையான வரம் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **துன்புறுவோருக்காக மன்றாடுவோம்:** உம் திருமகன் இயேசுவின் பிறப்பு துன்புறும் அனைவருக்கும் பாதுகாப்பும், மனவலிமையும் தரவும் இதனால் உமது தெய்வீக, குணமளிக்கும் ஆற்றலைப்பெற்று மகிழவும் அருள் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. அனைத்துக் குடும்பங்களும் உண்மையான அன்பால் ஆட்கொள்ளப்படவும், உலகிலே மகிழ்ச்சியின் சாட்சிகளாக அவை செயல்படவும் தேவையான அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. இந்திய நாட்டின் நற்செய்தி அறிவிப்புப் பணிக்காகத் தங்களையே அர்ப்பணித்துக்கொண்டவர்களுக்கு தாராள மனத்துடன் பொருள் உதவி, பண உதவி செய்கின்ற அனைவருக்கும் நிறை ஆசிகளை வழங்கிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

6. நாங்கள் அனைவரும் தூய ஆவியாரின் வழிநடத்துலால் ஆட்கொள்ளப்படவும், எமது உள்ளங்கள் இயேசுவை வரவேற்கும் இல்லங்களாக மாறவும் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# திருவருகைக் கால இரண்டாம் ஞாயிறு

# கடவுளைப் புகழ்வதில் கொண்டாடப்படும் அமைதி

## முன்னுரை

இயேசுவில் அன்புக்குரியவர்களே, திருவருகைக் காலத்தின் இரண்டாம் ஞாயிறாகிய இன்று "திருவழிபாடு" என்ற இரண்டாம் வத்திக்கான் சங்க கொள்கைத் திரட்டு சுட்டிக்காட்டுவதைப்போல "கடவுளைப் புகழ்வதில் கொண்டாடப்படும் அமைதி " என்ற பொருளில் சிந்திக்கத் தூண்டுகிறது. திருவழிபாடு திரு அவையினுடைய குரலாகவும் தூய ஆவியாருடைய குரலாகவும் உள்ளது. இது நம் ஒவ்வொருவரையும் முழு ஆர்வத்துடன் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு இறைவனுடன் உரையாடல் நடத்தி நமது இதயங்களை வரலாற்றில் மாட்சியுடன் வர இருக்கும் ஆண்டவரை வரவேற்கத் தயாரிக்கிறது. திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் வழியாக தூய வாழ்வின் வழியைக் கண்டுணரவும் அதன் வழியாக கடவுளுடனும், மற்றவருடனும் கொண்டுள்ள ஒன்றிப்பில் அமைதியைக் காணவும் இந்தப் புனிதமான திருவழிபாட்டுக் கொண்டாட்டாத்தில் நம் இதயங்கள் கடவுள் தரும் அமைதியில் மகிழவும், நமது உலக வாழ்வில் நிறைவான நற்செய்தியை அறிவிக்கக்கூடிய வகையில் செயல்படவும் இறைவனின் வழிநடத்துதலை நாடிப்பெறுவோம்.

## திருவருகைக் கால மலர்தொடுப்பிற்கான மன்றாட்டு

ஆண்டவரே, உமது மனிதப் பிறப்பின்மூலம் இவ்வுலகில் அமைதியின் அரசராக அறிமுகமானீரே, இந்த திருவருகைக் கால நாள்களில் மிகச்சிறந்த நபர்களாக வாழ ஆசிக்கும் எங்களை உமது ஆழ்ந்த, நிலையான அமைதியால் நிரப்பும். அதே அமைதியை ஒவ்வொருவருடனும் பகிர்ந்து வாழவும் குறிப்பாக நாங்கள் சந்திக்கும் தேவையில் இருப்போருடன் பகிர்ந்து கொண்டு வாழவும் இந்த மலர்தொடுப்பை நாங்கள் அர்ப்பணிக்கின்றோம் இதற்கு உம் ஆசிகளை நிறைவாக வழங்கியருளும்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்

**1. திரு அவைக்காக மன்றாடுவோம்:** திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் எங்களது பங்கேற்பு கிறிஸ்துவின் மறையுடலில் பங்கேற்கும் நிலையை உறுதிபடுத்துவதை உணரவும், நாங்கள் தயாரிப்பு, ஒப்புரவு என்னும் எண்ணங்களால் தூண்டப்பட்டு, உலகில் அமைதியின் சுடர்களாக திகழவும் எங்களைத் திரு அவை வழிநடத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**2. உலகத் தலைவர்களுக்காக மன்றாடுவோம்:** உலகத்தலைவர்கள் அனைவரும் நீதி, இரக்கம், சமத்துவம் போன்ற நெறிமுறைகளால் வழிநடத்தப்படவும் அவர்களின் முடிவுகளில் கடவுளைப்புகழவும் மனித வாழ்வில் அமைதியை உருவாக்கவும், நாடுகளில் ஒற்றுமை, சகோதரத்துவம் வளர்ச்சிபெறவும் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. திருவழிபாட்டுக்கொண்டாட்டங்களில் பங்குபெறும் அனைவரும் தூய்மையான வாழ்வின் அழைத்தலை உணர்ந்து வழிபாட்டுக் கொண்டாட்டங்கள் மூலம் பெறுகின்ற அருள் ஒவ்வொருவரும் உண்மையான சீடர்களாக மாறும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. **மன்னிப்பைத் தேடுவோருக்காக மன்றாடுவோம்:** பாவக்கறைகளால் துவண்டு வாடுவோர் ஒப்புரவில் மன அமைதியையும், ஆறுதலையும் பெற்று இறைவனின் இரக்கத்தை உணர்ந்து நம்பிக்கையின் சாட்சிகளாகச் செயல்பட வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. **அமைதியை ஏற்படுத்த:** திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் மூலம் தூண்டுதல் பெறும் அனைவரும் அமைதிக்கான வழிமுறைகளை ஏற்றுக்கொண்டு தனிநபர் விரும்பும் அமைதி சமுதாயத்திலும், நாட்டிலும் எதிரொலிக்கவும், ஒற்றுமை நல்லிணக்கம் இவைகளை நமக்கு அருகாமையில் உள்ள அனைவரும் பெற்று மகிழவும் அருள்புரிய இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# திருவருகைக் கால மூன்றாம் ஞாயிறு

# திரு அவையின் மகிழ்ச்சி

முன்னுரை

இறை இயேசுவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறாகிய இன்று மீட்பரின் பிறப்பு அண்மையில் உள்ளதால் நம் அனைவருக்கும் பொதுவான அழைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண்டவர் இயேசுவில் நம்பிக்கை கொண்டுள்ள திரு அவை உறுப்பினர்கள் அனைவரும் உண்மையான மகிழ்ச்சியில் வளர்வதே நமது அடையாளம். இதனை திரு அவையின் போதனைகள் தெளிவுபடுத்துகின்றன. நாம் அனைவரும் நிறைவான மகிழ்ச்சியைக் கூட்டு ஒருங்கியக்க வாழ்விலும், நற்செய்தி அறிவிப்பிலும் துடிப்புடன் செயல்படுத்த வேண்டும். இறைவனோடும் அனைத்து நம்பிக்கையாளர்களோடும் உள்ள உறவு ஒன்றிப்பில் வளர்ந்து, உண்மையான மகிழ்ச்சியை அடையாளம் கண்டுகொள்ள இந்த திருப்பலியில் அருள் வேண்டுவோம்.

## திருவருகைக்கால மலர்தொடுப்பிற்கான மன்றாட்டு

ஆண்டவரே, உமது வல்லமையில் நம்பிக்கை வைக்கவும் எங்களது கண்களை உம்மீது பதியச்செய்யும் இந்தத் திருவருகை நாள்களில் உமது பிறப்பு இவ்வுலகிற்கும் எங்கள் வாழ்விற்கும் அமைதியைக் கொண்டுவந்த நிகழ்வு என்பதை அறிந்து கொள்ளவும், நன்றியுணர்வுடன் உமது பிறப்பை வெளிப்படுத்தும் குடிலைச் சந்தித்து மகிழ்ச்சியை எங்களது அன்றாட வாழ்வில் கண்டுகொள்ளவும் தூண்டுகின்ற இந்த மலர்தொடுப்பைச் சமர்ப்பித்து எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

# நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்

1. திரு அவை நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் கூட்டு ஒருங்கியக்க வாழ்விலும் முழுமையான மகிழ்வைக் கண்டுகொள்ளவும், உற்சாகத்துடன் ஈடுபடவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கடவுளின் மீட்புச் செய்தி உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் மகிழ்ச்சியையும் அமைதியையும் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. உலக வாழ்வில் தனிமை, வறுமை, நோய், துன்பம், விரக்தி இவைகளால் உண்மையான மகிழ்ச்சியை இழந்தவர்கள் உம் திருமகன் இயேசுவின் பிறப்பினால் ஆறுதலையும் ஆதரவையும் பெற்று மகிழ இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையாளர்கள் ஒவ்வொருவரும் அருள்கொடைகளால் தூண்டுதல் பெற்று ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொண்டு ஒவ்வொருவரின் தனித்துவத்தையும் புரிந்துகொண்டு ஒற்றுமையை வளர்க்கத் தேவையான ஆற்றல் தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. **நன்றியுணர்விற்காக:** மீட்பின் எதிர்நோக்கில் மகிழ்ந்திருக்கும் எங்களுக்கு உமது அளவிடமுடியாத நலன்களைத் தந்து வழிநடத்தி வருவதற்காக நன்றி கூறுகிறோம். எங்கள் நன்றியுணர்வை உண்மையான நம்பிக்கை செயல்களில் வெளிப்படுத்த வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# திருவருகைக் கால நான்காம் ஞாயிறு

# உலகனைத்திற்கும் வழங்கப்பட்ட அன்பு

முன்னுரை

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறாகிய இன்று, உலகனைத்திற்கும் வழங்கப்பட்ட அன்பு இயேசுகிறிஸ்துவே என "இன்றைய உலகில் திரு அவை" என்ற கொள்கைத் திரட்டு வலியுறுத்துகிறது. அதை உணர்ந்து கொள்ளவும், நாம் அனைவரும் வயது, அனுபவம், காலத்தின் அறிகுறிகள் ஆகியவறைக் கருத்தில் கொண்டு உண்மையான அன்பை உலகனைத்திற்கும் வழங்கவும் அழைக்கப்பட்டுள்ளோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளவும், இறைவார்த்தையில் தூண்டுதல் பெற்று உண்மையான அன்பில் வளர்வதற்கு எதிராக உள்ள சவால்களை அடையாளம் கண்டு இயேசுவின் அன்பை உலகின் அனைத்து நபர்களும் அனுபவித்து மகிழவும் அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## திருவருகைக் கால மலர்தொடுப்பு மன்றாட்டு

ஆண்டவரே, உமது அன்பின் ஒளி எங்கள் உள்ளங்களில் எப்போதும் ஒளிர்வதாக. கிறிஸ்து பிறப்பு விழா அண்மையில் உள்ள இக்காலக்கட்டத்தில் உமது அளவிடமுடியாத அன்பின் வல்லமையை உணரவும், உமது உண்மையான அன்பு எங்கள் ஒவ்வொருவரின் செயல்களைத் தொடவும் அதனால் மாற்றம் பெறவும் இம்மலர்த் தொடுப்பை அர்ப்பணித்து எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

# நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இறைவா உமது திரு அவை, காலத்தின் அறிகுறிகளை அறிந்து, அனைத்து மக்களுக்கும் இறைவனின் அன்பு சென்றடைய நிறைவேற்றும் அன்புப் பணிகளையும் சாட்சிய வாழ்வையும் பகிர்ந்துகொண்டு செயல்பட, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகத் தலைவர்கள் அன்பு, நீதி, சமத்துவம், அமைதி நிறைந்த சமுதாயத்தை உருவாக்கும் கருவிகளாகச் செயல்பட்டு அனைத்து மக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபட முன்வர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைவா, குழந்தை பெற்றெடுக்கும் நிலையில் உள்ள அன்னையர்களுக்கு ஆசி வழங்கியருளும். தங்களது குழந்தைகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் இவர்கள் உண்மையான அன்புடனும், மனித மாண்புடனும் செயல்பட நலமான மகப்பேற்றை எதிர்கொள்ள அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இறைவா, குடும்பங்களில் அன்பு, அமைதி, ஒற்றுமை போன்ற பண்புகள் உறுதி பெறவும் உமது உண்மையான மகிழ்ச்சியின் சாட்சிகளாக அவை திகழவும் அருள்தர உம்மை மன்றாடுகிறோம்.

5. நம்பிக்கையாளர்கள் அனைவரும் இறைவிருப்பத்தைத் தங்கள் வாழ்வில் உணர்ந்து, திறந்த உள்ளத்துடனும், உண்மையுடனும் உலகில் வாழும் அனைவருக்கும் அன்பைப் பகிர்ந்து வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# கிறிஸ்து பிறப்பு பெருவிழா

# இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் நம்மில் வாழ்கிறார்.

முன்னுரை

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே இன்று கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறோம். இன்னும் குறிப்பாக குழந்தையாக பிறக்கும் இயேசுபாலன் நேற்றும், இன்றும், என்றும் நம்மில் வாழ்கிறார். திரு அவையில் மறுமலர்ச்சியை உருவாக்கிய இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் குறிப்பிடுவதைப்போல இயேசுவின் பிரசன்னத்தை நமது வாழ்வால், வார்த்தைகளால் வெளிப்படுத்தவும் எதிர்நோக்கிலும் உண்மையான மகிழ்ச்சியிலும் வாழவும் இந்தப் பெருவிழா திருப்பலியில் ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். அன்னை மரியா இறைவல்லமையால் நிரப்பப்பட்டு இயேசுபாலனை உலகிற்குக் கொடுத்தபோது மகிழ்ச்சி அடைந்ததைப்போல நாமும் இயேசுவை அனைவருக்கும் கொடுக்கக்கூடிய கருவிகளாய்த் திகழ அருள்வேண்டி மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டுகள்

1. பாலன் இயேசுவின் பிறப்புப் பெருவிழபவைக் கொண்டாடி மகிழும் திரு அவை உலகிற்கு ஒளியாகச் செயல்படவும் மீட்பின் எதிர்நோக்கை அனைவருக்கும் அறிவிக்கக்கூடிய கருவியாகத் திகழவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. உலகத் தலைவர்கள் நீதி, அமைதி, மனிதநேயம், சகோதர அன்பு என்னும் மதிப்பீடுகளால் வழிநடத்தப்பட்டு உலகில் வாழும் அனைவரும் இறைவனின் வல்லமையை உணர்ந்து செயல்பட, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. குடும்பங்களில் உண்மையான அன்பும், அமைதியும் இடம்பெறவும் இயேசுவின் பிறப்பில் அனைத்துக் குடும்பங்களும் மகிழ்ந்திருக்கவும் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உலகில் வாழும் ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோர் அனைவரும் இயேசுபாலனின் அன்பும் மகிழ்ச்சியும் பெற்று மகிழ்வுடன் வாழ வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்ற அனைவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை வாழ்ந்து காட்டுவதில் மன உறுதிபெறவும், தங்களது வாழ்விலும் செயல்களிலும் சாட்சிகளாகச் செயல்படவும் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

மொழிபெயர்ப்பு<br>தமிழக திருவழிபாட்டுப் பணிக்குழு,<br>திண்டிவனம்.

# யூபிலி 2025 இறைவேண்டல்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரருமான இயேசு கிறிஸ்துவில்
நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கையும்
தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில்
நீர் பற்றியெரியச் செய்த பிறரன்புச் சுடரும்
உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை
எங்களில் தட்டி எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும்
நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக!
தீமையின் ஆற்றல்கள் மறைந்து
உம் மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு
மானிட உள்ளங்களும் முழு அண்டவெளியும்
புதிய விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய
காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலிக் கொண்டாட்டத்தின் அருள்
விண்ணகச் செல்வங்களுக்கான ஆர்வத்தை
எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய எம்மில்
தூண்டி எழுப்புவதாக!
அதே அருள் எம் மீட்பரின்
மகிழ்ச்சியையும் அமைதியையும்
அகிலமெங்கும் அளிப்பதாக!

என்றென்றும் போற்றுதற்குரிய எம் கடவுளாகிய உமக்கே
மாட்சியும் புகழும் இன்றும் என்றும் உரித்தாகுக!

ஆமென்.

திருத்தந்தை பிரான்சிஸ்

To be recited from 26 November 2023, Solemnity of Christ the King.